போர்டு இந்தமாதிரி பொலூஷனைத் தவிர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கை களை எடுக்கவேண்டுமென்று அரசுக்குச் சொல்லியிருக்கிறது? அதைப்பற்றி அரசு பரிசீலித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இவற்றைப் பரிசீலிப்பதற்காகத்தான் மத்திய அரசு ஒரு வல்லுநர் குழுவை அமைத்திருக்கிறது. இந்த வல்லுநர் குழு இதைப்பற்றி ஆய்வு செய்திருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற பயம் நியாயமான பயம் தான் என்று தெரிவித்திருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்த இடத்திற்குப் பதிலாக இன்னொரு இடத்திற்கு மாற்றி அங்கு ஏன் ஆரம்பிக்கக்கூடாது என்று அவர்களே கேட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது 'ஆல்டர்னேடிவ்' இடம் சொன்னால், அங்கு ஆரம்பிப்பதற்கு அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Salem Magnesite

* 176 *Q*.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the date on which the licence issued for the Company engaged in mining operations of Magnesite in Salem, expired;

(*b*) the number of times when the Company sought for extension of the licence period; and

(*c*) the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) திருவாளர்கள் சேலம் மாக்ன சைட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 3—12—1957-லிருந்து 20 ஆண்டுகளுக்கு நீடித்து கொடுக்கப்பட்ட சுரங்கக் குத்தகை 2—12—1977 ஆம் தேதியுடன் முடிவடைந்தது.

(இ) இந்தக் குத்தகையை மேலும் 20 ஆண்டுகளுக்கு, அதாவது 3—12—1997 வரை நீடிக்கக்கோரி, இந்த நிறுவனம் 3—12—1976 அன்று ஒரு விண்ணப்பம் கொடுத்தது.

(உ) இந்த இடத்தில் அரசே கனிப்பொருள் தோண்ட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டதால், இந்த நிறுவனத்தின் சுரங்கக்குத்தகை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அரசின் சார்பில் "ரெய்சிங் காண்டிராக்டர்" என்ற

1981 மார்ச் 26]

முறையில் இந்தச் சுரங்க வேலையை மேற்கொள்ள "தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்" என்ற நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டு 8—2—1979 முதல் இந்த நிறுவனம் சுரங்க வேலையைச் செய்து வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மாக்னசைட் தோண்டி எடுக்கின்ற நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்ட சுரங்கக் குத்தகை 2—12—1977 ஆம் தேதியுடன் முடிவடைந்தது என்றும், அதற்குப் பிறகு அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று முடிவு செய்துள்ளது என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்போது, எந்த ஆண்டு, எவ்வளவு காலத்திற்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது? இதற்கிடையிலே அதிலே பணியாற்றிக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் நிலை பற்றி அரசு பரிசீலித்ததா? அந்த அடிப்படையில் அரசு வேகமாக நடவடிக்கை எடுத்ததா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : 8—2—1979 முதல் இந்த நிறுவனம், இந்தச் சுரங்க வேலையைத் தொடங்கி செய்து வருகிறது. இதிலே ஏற்கெனவே பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், தமிழ் நாடு மாக்னசைட் நிறுவனத்தில் பலர் 'அப்சார்ப்' செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே பணியாற்றிய தொழிலாளர்கள் பற்றிய முழு புள்ளிவிவரங்கள் இங்கே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், அதைப்பற்றி அறிந்து சொல்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்த சேலம் மாக்னசைட் நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு, இந்த நிறுவனம்பற்றி வேறு ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, அரசே அதை எடுத்து நடத்துகின்ற முடிவு எடுத்திருப்பதால், அந்த உரிமத்தை நீடிப்பதிலே கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதிலே தொழிலாளர்களுடைய தவறு எதுவும் இல்லை. ஆனால் அவர்கள் வேலையற்று இருந்தார்கள். அவர்களுக்கு 'காம்பென்சேஷன்' என்ற அளவிலே அரசு ஏதாவது தொகை தருமா? அந்தக் காலத்திலேயிருந்து அவர்கள் சிரமப்பட்டிருக்கிறார்கள். பல போராட்டங்கள் நடத்துகின்ற அளவுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்தக் கேள்வியை அவர்கள் மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் சேலத்தில் மாக்னசைட் தோண்டி எடுக்கும் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த உரிமம் முடிவடைந்த நாள் எது, வழங்கப்பட்ட கால அளவை நீட்டிக்க எத்தனை முறை அரசை அணுகியது என்று கேட்டிருக்கிறார். தொழிலாளர்கள் பற்றிய கேள்வியாக

இருந்திருந்தால், 200 பேர், 300 பேர் வேலையில் இருந்தார்கள், இவ்வளவு வாய்ப்பு பெறுகிறார்கள் என்பது போன்ற விவரங்களை வைத்திருக்க முடியும். உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாகப் போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. க. இராமமூர்த்தி : தனியாகக் கேள்விகள் கேட்கிறோம். இருந்தாலும் அமைச்சர்கள் பதில் சொல்லும்போது, கேள்விக்குத் தொடர்பான விவரங்களோடு அவைக்கு வருவார்களென்று உறுப்பினர்கள் எதிர்பார்க்கிறார்கள். அமைச்சர்களும் இப்படிப்பட்ட துணைக் கேள்விகளை எதிர்பார்க்க வேண்டும். என்னுடைய கேள்வி தொடர்பான கேள்விதான். இதற்கே பதில் இல்லாமல் இருக்கிறதென்பதைப் பார்க்கின்றபோது, அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட துறையை இன்னும் வேகப்படுத்தி முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா-விடை போய் விவாதமாகியிருக்கிறது.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : துணைக் கேள்விகளுக்கான குறிப்புகளும் துறையிலிருந்து வந்திருக்கின்றன. ஒட்டுமொத்தமாக என்னவெல்லாம் வரும் என்று எதிர்பார்த்து, குறிப்புகளைக் கொடுக்க வேண்டுமென்றால், ஒரு புத்தகமே கொடுக்க வேண்டியிருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் எதைப்பற்றிக் கேட்கிறார் என்பது வினாவில் இருப்பதுடன் சம்பந்தப்பட்டிருந்தால், பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, வினாக்கள்—விடைகள் பகுதியிலே முதல் கேள்விக்கு அமைச்சரவர்கள் விடையளிக்கும்போது (வினா எண் 169), தவறாக அதில் அச்சடிக்கப்பட்டிருக்கிறதென்று நான் சொல்லவில்லை. நான் எழுதி அனுப்பியபோது அப்படி எழுதியதாக என்னுடைய நினைவு என்பதைத்தான் நான் சொன்னேன். நான் தந்துள்ள குறிப்பிலே டி.எஸ்.எல்.சி. என்றுதான் இருக்கிறதென்று தலைவரவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவே நான் அனுப்பியபோதே அந்தத் தவற்றைச் செய்திருப்பதால், அதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.